**நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.**
**முன்னிலை.–திரு.அ.விஜயபாரதி பி.ஏ.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சி.ஆர்.எம்.பி.எண்.212/2026**

in

Cr.No:119/2026

சரவணக்குமார்,
த/பெ.பால்பாண்டி,
திருப்பதி நகர்,
மெட்டராஸ்காரர் காம்பவுண்டு,
பள்ளப்பட்டி, திருத்தங்கல். ... மனுதாரர்/1 வதுஎதிரி

–எதிர்–

அரசுக்காக, உதவி ஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.119/2026,
பி.என்.எஸ். பிரிவுகள் 296(பி), 126(2), 115(2), 118(1),
351(3) ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு 06.03.2026 ஆம் ஆகிய இன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.முத்துக்கண்ணன், பி.பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பின் பதிலை பெற்றும், இரு தரப்பு மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/1 வதுஎதிரிக்கு இந்நீதிமன்றம் சி.ஆர்.எம்.பி.எண்.198/2026 மனுவில் நிபந்தனையுடன் பிணை வழங்கிய உத்தரவில் தனக்கு வழங்கப்பட்ட நிபந்தனையை மாற்றி அமைத்து உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் தரப்பில், மனுதாரர் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் ஆஜராகி 15 நாட்கள் வரை கையொப்பம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் உரிய ஜாமின்தார்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் இந்நீதிமன்ற உத்தரவுப்படி சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் 28.02.2026 முதல் 02.03.2026 வரை ஆஜராகி 3 நாட்கள் மட்டுமே கையொப்பம் செய்துள்ளார். மேலும் மனுதாரர்/எதிரியின் மீது எதிர்மனுதாரர் தரப்பில் பொய்

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

வழக்குகள் தொடர முயற்சி செய்து வருவதால் மனுதாரர்/எதிரி சிவகாசி கிழக்கு காவல்நிலையத்தில் ஆஜராகி கையொப்பம் செய்வதற்கு தனக்கு வழங்கப்பட்ட நிபந்தனையை மாற்றி அமைத்து உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதார் தரப்பில், மனுதாரர் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் கடந்த 28.02.2026 ஆம் தேதி முதல் 02.03.2026 ஆம் தேதி வரை 3 நாட்களாக தினமும் காலை 10.00 மணியளவில் ஆஜராகி கையெழுத்திட்டுள்ளார். அதன் பின்பு மனுதாரர் கையெழுத்து போடவில்லை என்றும், மேற்படி வழக்கானது புலன் விசாரணை நிலையில் இருப்பதால் எதிரிக்கு கையெழுத்து நிபந்தனையை மாற்றி அமைத்தால் அவர் மீண்டும் இதுபோன்ற குற்ற செயலில் ஈடுபட வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு கையெழுத்து நிபந்தனையை மாற்றி வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் ஆஜராகி 15 நாட்கள் வரை கையொப்பம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் அந்த உத்தரவுப்படி, சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் 28.02.2026 ஆம் தேதி முதல் 02.03.2026 ஆம் தேதி வரை காலை 10 மணிக்கு ஆஜராகி 3 நாட்கள் மட்டுமே கையொப்பம் செய்து வந்துள்ளார் என்பது தெரிகிறது. மேலும் மனுதாரர்/ எதிரி நிபந்தனை கையெழுத்து செய்வதற்கு காவல் நிலையம் செல்லும்போது அங்குள்ள போலீசார் மனுதாரர்/எதிரியை கையொப்பம் செய்யவிடாமல் நிற்க வைத்து அவர் மீது பொய் வழக்கு போட முயற்சி செய்கின்றனர் என்ற மனுதாரர்/எதிரி தரப்பு வாதத்தினை ஏற்று மனுதாரர்/எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி 12 நாட்கள் காலை 10.00 மணிக்கு கையெழுத்து செய்யவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2

சிவகாசி.